**கவனிக்க.**- (i) இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் *2020* ஆம் ஆண்டிற்கான பதுளை மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களில் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் , ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

(ii) *2020.01.09* ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2159 - 2020 ජනවාරි මස 17 වැනි සිකුරාදා - 2020.01.17

*2159 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 88 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 90 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) கண்டிய விவாகம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் 2020, சனவரி மாதம் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) இலங்கை இயன்மருத்துவச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, சனவரி மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

.'ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


87-B 81598-405 (2020/01)

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் விபரமுடைய கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்* : பெஸ்ட் பிஸினெஸ் (பீவீரி) எல்ரிடி
*பதிவிலக்கம்* : பீவீ 00215011
*பதிவு முகவரி* : 33/50, சின்னத் தோணா வீதி, காத்தான்குடி 02
*கூட்டிணைப்புத் திகதி*: 2019, ஓகத்து 30

எஸ்.எச். எம். றிஸ்வி,
கம்பனிச் செயலாளர்.

1- 404

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் முன்னைய பெயர் : மது நதீ இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிடட்
பதிவிலக்கம் : பீவீ 74960
பதிவு முகவரி : இல.231/32, பீட்டர் மாவத்தை, ஆமன்தொலுவ, சீதுவ
கம்பனியின் புதிய பெயர் : நியு மது நதீ இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிடட்
பெயர் மாற்றத் தினம்: 2018.07.13

கம்பனிச் செயலாளர்கள்.

1- 440

---

## அறிவித்தல்

ஜனசக்தி பிஎல்சியுடன் டுனாமிஸ் கப்பிட்டல் பிஎல்சியின் தொழிலிணைப்பு

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் அடிப்படையாகக் கொண்டு விடுக்கப்படும் இந்த அறிவித்தலானது, ஜனசக்தி பிஎல்சி மற்றும் டுனாமிஸ் கப்பிட்டல் பிஎல்சி ஆகிய நிறுவனங்கள் குறித்த சட்டத்தின் 239 ஆவது பிரிவிற்கு அமைய தொழிலிணைப்பில் இணைந்துள்ளது என்பதை அறியத்தருகின்றது. இதில் தொழிலிணைப்பு செய்யப்பட்ட நிறுவனம் ஜனசக்தி பிஎல்சி ஆகும்.

இந்த தொழிலிணைப்பு ஆனது, கம்பனிகள் பதிவாளர் நாயகம் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, குறித்த தொழிலிணைப்பானது 2019.12.06 ஆந் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இந்தத் தொழிலிணைப்பு சான்றிதழ் மற்றும் கூட்டிணைப்புச் சான்றிதழ் ஆகியவை பரிசீலனைக்காக இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு -03 இல் உள்ள ஜனசக்தி பிஎல்சி பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் தயார் நிலையில் உள்ளது.

கே எச் எல் கோர்ப்பரேட் சேர்விசஸ் லிமிடெட்,

ஜனசக்தி பிஎல்சி.

1- 456

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஹைரியா டிரெவல்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
பதிவு முகவரி : 84/4 எச், பல்லேவெலிகெடிய, புளுகொஹதென்ன, அக்குறனை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.11.27
பதிவிலக்கம்: பீவீ 127614

பணிப்பாளர்கள்.

1- 489

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சாருக் ஜெம் (பீவீடி) எல்டீடி
பதிவு முகவரி : 125/1டீ, பல்லேவெலிகெடிய, புளுகொஹதென்ன, அக்குறணை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.11.05
பதிவிலக்கம்: பீவீ 00217254

பணிப்பாளர்கள்.

1- 490

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : எஸ். கே. ஃபார்ம் என்ட் அக்ரிகல்ச்சர் (பீவீடி) எல்டீடி
பதிவு முகவரி : இல.14, 2 ஆம் குறுக்குத் தெரு, உதய நகர் கிழக்கு, கிளிநொச்சி
பதிவிலக்கம்: பீவீ 00218532
பதிவுத் திகதி : 2019.12.19

கம்பனிச் செயலாளர்கள்.

1- 615

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : விக்கசித்த கார்டன்ஸ் (பீவீடி) எல்டீடி
பதிவிலக்கம்: பீவீ 00209219
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.15/1/1, பிரண்டியாவத்த, வெல்லம்பிட்டி, கொலன்னாவ-10600

பணிப்பாளர்.

1- 669

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டி மாவட்டத்தில், பேராதனை வீதி, இலக்கம் 156/ 6 என்ற முகவரியில் வசிக்கும் புஷ்பா சாந்தனீ திலகரத்ன (தேசிய அடையாள அட்டை இல. 555421494V) ஆகிய நான், இல.156/6, பேராதனை வீதி, கண்டி என்ற முகவரியில் வசிக்கும் இரதிகா ஷிரந்தி திலகரத்ன (தேசிய அடையாள அட்டை இல. 567620921V) என்பவருக்கு அற்றோணித் தத்துவத்தை வழங்கி சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு சஞ்சய பீ. விஜேதுங்க என்பவரால் 2008, யூன் 09 ஆந் திகதி எழுதிச் சான்றுப்படுத்தப்பட்ட 668 ஆம் இலக்க அற்றோணித்தத்துவப் பத்திரத்தை அந்த அற்றோணி உரிமையாளரான நான், 2019, திசெம்பர் 31 ஆந் திகதி இத்தால் நீக்கி இரத்துச் செய்வதாகவும், இதன்பின் இரதிகா ஷிரந்தி திலகரத்ன ( தேசிய அடையாள அட்டைஇல. 567620921V) என்பவரால் அந்த அற்றோணித் தத்துவப் பத்திரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல்வாங்கலுக்கும் நான் பொறுப்புச் சொல்ல மாட்டேன் எனவும் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பொது மக்களுக்கு அறிவித்துக் கொள்கின்றேன். இந்த அற்றோணிப் பத்திரப் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின், கண்டி மத்திய வலய அலுவலகத்தில் எழுத்து மூல அதிகாரம் வழங்கல் மற்றும் அற்றோணி அனுமதிப் பத்திரப் புத்தகத்தின் நாளேடு இலக்கம் 1292 இன் கீழ் 03 ஆம் பிரிவின் 34 ஆம் பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

புஷ்பா சாந்தனீ திலகரத்ன,
அற்றோணி உரிமையாளர்.

1- 405/1

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டி மாவட்டத்தில், பேராதனை வீதி, இலக்கம் 156/ 6 என்ற முகவரியில் வசிக்கும் புஷ்பா சாந்தனீ திலகரத்ன (தேசிய அடையாள அட்டை இல. 555421494V) ஆகிய நான், இல. 21, ஹில் ஸ்ரீட், கம்பளை என்ற முகவரியில் வசிக்கும் பிரபாத் பராக்கிரம இரனவீர ( தேசிய அடையாள அட்டை இல. 611830017V) என்பவருக்கு அற்றோணித் தத்துவத்தை வழங்கி கண்டி சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு சஞ்சய பீ. விஜேதுங்க என்பவரால் 2003, திசெம்பர் 13 ஆந் திகதி எழுதிச் சான்றுப்படுத்தப்பட்ட 142 ஆம் இலக்க அற்றோணித்தத்துவப் பத்திரத்தை அந்த அற்றோணி உரிமையாளரான நான், 2019, திசெம்பர் 31 ஆந் திகதி இத்தால் நீக்கி இரத்துச் செய்வதாகவும், இதன்பின் பிரபாத் பராக்கிரம இரனவீர (தேசிய அடையாள அட்டை இல. 611830017V) என்பவரால் அந்த அற்றோணித் தத்துவப் பத்திரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல்வாங்கலுக்கும் நான் பொறுப்புச் சொல்ல மாட்டேன் எனவும் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பொது மக்களுக்கு அறிவித்துக் கொள்கின்றேன். இந்த அற்றோணிப் பத்திரப் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின், கண்டி மத்திய வலய அலுவலகத்தில் எழுத்து மூல அதிகாரம் வழங்கல் மற்றும் அற்றோணி அனுமதிப் பத்திரப் புத்தகத்தின் நாளேடு இலக்கம் 1473 இன் கீழ் 19 ஆம் பிரிவின் 14 ஆம் பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

புஷ்பா சாந்தனீ திலகரத்ன,
அற்றோணி உரிமையாளர்.

1- 405/2

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

நுகேகொடையின் ஹை லெவல் வீதி, 202 என்ற இடத்தில் வசிக்கும் ( தே.அ.அ.இல. 737170039V) ஐ உடைய கோஹொம்பன் அராச்சிகே தனுஜா லக்ஷீன் திருமணத்திற்கு முன் பாத்திமா ஃபர்ஹா பைசல் ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு திரு. கீர்த்தி உதவத்தே 2003, சனவரி 23 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 298 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தின் மூலம் எனது அற்றோணி தத்துவகாரராக நுகேகொடவின் ஹை லெவல் வீதி, 191 என்ற முகவரியில் வதியும் தென்னகோன் முதியன்சேலாகே பத்மலதாவுக்கு(தே.அ.அ.இல.717383630ஐஉடைய)என்பவரை

நியமித்திருந்த அற்றோணித் தத்துவத்தை 2020, சனவரி 01ஆந் திகதி முதற்கொண்டு சட்ட ரீதியாக இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்ளும் வகையில் அறிவிக்கின்றேன் மற்றும் அவர் செய்யும் எந்தவொரு பரிவர்த்தனைக்கும் எனக்கு எந்தப் பொறுப்பும் இல்லை.

பாத்திமா ஃபேர்ஹா பைசல்.

1- 452

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது, 2018.10.15 ஆந் திகதியிடப்பட்டு லிவர்பூல், ஐக்கிய இராச்சியத்தின் சொலிசிட்டர் டேவிட் ஸ்பீட் முன்னிலையில் கொழும்பு 6, வெள்ளவத்தை, சர்வதேச பௌத்த மத்திய நிலைய வீதி, இல. 69 ஐச் சேர்ந்த சன்னாசி முத்தையா சண்முகராஜா என்பவரின் பெயரில் C/O T2M SW London Ltd. No.28, London Road, Tooting London SW 17 9HW, United Kingdom ஐச் சேர்ந்த அல்ரின் கோபிநாத் சண்முகராஜா ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட விஷேட அற்றோணித் தத்துவப்பத்திரம் 2019.10.28 ஆந் திகதி மீளப் பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகிறது. இன்று முதல் அற்றோணித்தத்துவதாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

அல்ரின் கோபிநாத் சண்முகராஜா.

1- 492

---

## ஏல விற்பனைகள்

**ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ- நீர்கொழும்புக் கிளை**

( முன்பு ஹற்றன் நெஷனல் வங்கி லிமிட்டெட் என சொல்லப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

**கடன் எடுத்த றொனி கொட்டேஜ் ( பிரைவேட்) லிமிட்டெட் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜி.எம்.எம். பர்னாந்துவின் 2015.02.16 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 4883 இன் மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் மிகுதி முற்பணம் வட்டியும் ஏலதாரரின் சொல்லப்பட்ட பணத்தொகைகளை பெற்றுக் கொள்ள ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி,**

இக் கீழ் விபரிக்கப்பட்ட காணிகளை 2020, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

நீர்கொழும்பு பதிவு எல்லையில் மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 75A பலன்கந்துர கிராம அலுவலர் எல்லையில் துணகாபத்து அளுத்குரு கோரளையில் நீர்கொழும்பு நகர சபை எல்லையில் பலன்கதுர கிராமத்தில் உள்ள கும்புக்காவத்த மற்றும் கோண்காவத்த காணிக்கு நில அளவையாளர் பாலந்திரன் 2014.09.13 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2014/01/209 இல் காண்பிக்கப்பட்ட லொட் A . இக்காணியின் விஸ்தீரணம் : 0ஏ.01றூ.12.85 பே. இக்காணியில் உள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து.

**மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2019.07.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.08.13ஆந் திகதிய மவ்பிம , டெயிலி மிரர் மற்றும் தினக் குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.-** தலவுவகொட்டுவ சந்தியில் இருந்து சிலாபம் - கொழும்பு பிரதான ரோட்டில் நீர்கொழும்பு பக்கம் 140 மீற்றர் சென்று வலது பக்கம் உள்ள சென். ஆனாஸ் ரோட்டில் 1.1 கி.மீற்றர் சென்று இடது பக்கம் பலன்கதுர சேர்ச் அடைய முன்பு 100 மீற்றர் சென்று இடது பக்கம் காணி உள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை ஏலதாரருக்கு பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 10% ;

(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);

(4) நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2000.00 ;

(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500.00 ;

(6) ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். செலுத்த தவறினால் கொடுக்கப்பட்ட 10% திருப்பி செலுத்தப்படமாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரம் உள்ளது.

**வேறு விபரங்களுக்கு.**- *"சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661828, 011- 2661866.*

*எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),*
*சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர்,*
*விலைமதிப்பீட்டாளர்,*
*நீதிமன்ற ஆணையாளர்.*

*இல. 200,*
*2 ஆவது மாடி, புதுக்கடை வீதி,*
*கொழும்பு 12.*
*தொலைபேசி இல. :011- 2445393, 011-2396520.*
*தொலைநகல் இல. : 011-2445393.*
*மின்னஞ்சல்:* senaservice@sltnet.lk

*1- 505*